<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 102/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாதையன் | நாள் | 25.02.2025 |
| தகப்பனார் பெயர் | பொன்னையன் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், தடவழி கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண்ணில் தடவழி கோருகிறேன் என்றால், ச.எண்.37/3A ல் தடவழி கோருகிறேன். ச.எண்.37/3A ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால், 1.02 ஏக்கர் நிலம் உள்ளது. அதாவது, என் பட்டா நிலத்தில் வண்டிப்பாதை உள்ளதாகவும், அதை பிரதிவாதிகள் தடுப்பதாகவும் கூறி தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். பிரதிவாதிகள் நிலத்தில் வண்டிப்பாதை எதுவும் கோரவில்லை என்றால், சரிதான்.

2) நான் என் நிலத்தில் வண்டிப்பாதை உள்ளதாக சொல்லும் நிலையில் அதை காண்பிக்க பத்திரமோ, வருவாய் ஆவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், என் கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் வண்டித்தடத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஆவணம் தான் என் தந்தையால் ச.எண்.37/3A ல் உள்ள தாவா சொத்தை கிரயம் பெற்றதற்கான கிரய ஆவணம் என்றால், சரிதான். 11.04.1977 ம் தேதியில் பெருமாள் கவுண்டரின் வாரிசுகள் பழனியப்பன், ராமகவுண்டன், சின்னதம்பி ஆகியோர்கள் மேற்படி நிலத்தை என் தந்தைக்கு விற்பனை செய்துள்ளனர் என்றால், சரிதான்.

3) மேற்படி வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் படி ச.எண்.37/3 ல் உள்ள 4.52 ஏக்கர் நிலத்திலிருந்து 1 ஏக்கர் நிலத்தை குறிப்பிட்ட சக்குபந்தி விவரத்திற்குட்பட்டு, என் தந்தை கிரயம் பெற்றுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி நிலத்திற்குரிய சக்குபந்தி பொன்னான் நிலத்திற்கு தெற்கு, கிழக்கு, பழனியப்ப கவுண்டர் நிலத்திற்கு மேற்கு, சின்னதம்பி நிலத்திற்கு வடக்கு என கண்டுள்ளது

என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் குறிப்பாக எங்கும் அளவுகள் மற்றும் திசைகளுடன் தடவழி உள்ளதாகவோ, அல்லது மாமூல் தடவழி உள்ளதாக கூட குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால், சரிதான்.

4) மேற்படி வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தின் அடிப்படையில்தான் நான் தடவழி பாத்தியதை கோருகிறேனா என்றால், மேற்படி கிரய ஆவணத்தையும், அதன் அடிப்படையில் என் தந்தை எனக்கு அளித்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தையும் அடிப்படையாக வைத்து தடவழி கோருகிறேன். கடந்த 21.07.2017ம் தேதியில் என் தந்தையும், என் சகோதரியும் சேர்ந்து மேற்படி தாவா சொத்தை எனக்கு தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளனர் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 தான் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் பதிவு நகல் என்றால், சரிதான்.

5) மேற்படி வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்து என் தந்தைக்கு கிரயப்படியும், பட்டா படியும், பாத்தியப்பட்டது என்றும், என் சகோதரிக்கு பிதுர்ராஜ்ஜிய படி பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். 1977ம் வருத்தில் என் தந்தை ச.எண்.37/3ல் 1 ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றாலும், மேற்படி 2017ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் ச.எண்.37/3Aல் எனக்கு 1ஏக்கர் 2சென்ட் நிலம் தானசெட்டில்மெண்ட் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும், சரிதான். என் தந்தை கிரயம் பெற்றபோது சொத்தை அளந்து பார்க்காமல், கிரயம் பெற்றுள்ளார். பின்னிட்டு பட்டா பெற்றபோது என் தந்தையின் அனுபவத்தில் 2சென்ட் நிலம் கூடுதலாக இருந்ததால், அதையும் சேர்த்து எனக்கு கொடுத்துவிட்டார்.

6) அதேபோல் மேற்படி 2017ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படியே ச.எண்.36/6ல் உள்ள 1ஏக்கர் 65சென்ட் நிலத்தையும், என் தந்தை எனக்கு தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார் என்றால், சரிதான். ஆனால் மேற்படி சொத்து என் பூர்வீக சொத்து ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பாக எங்கேனும் மேற்படி ச.எண்.36/6ல்

உள்ள நிலம் என் தந்தையின் பூர்வீக சொத்து என சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

7) மேற்படி ச.எண்.37/3A மற்றும் ச.எண்.36/6 ம் இணைநிலங்களா என்றால், இல்லை. தனித்தனியாக உள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் ச.எண்.36/6 க்கு குறிப்பாக தடவழி ஏதேனும் சொல்லப்பட்டுள்ளதா என்றால், சொல்லப்பட்டுள்ளது. மேற்படி இரு சர்வே எண்களுக்கும் சேர்த்து ஒரே தடவழியாக சொல்லப்பட்டுள்ளது. தனியாக எதுவும் சொல்லப்படவில்லை.

8) என் வழக்குரை சொத்து விவரத்தில் A செட்டியூல் சொத்திற்கு தென்புறத்தில் 12 அடி அகலம், 25 அடி நீளம் கொண்ட கிழமேல் வண்டிப்பாதை உள்ளதாக நான் சொல்லியுள்ளதுபோல் வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பாக நீள, அகல அளவுகள் மற்றும் திசைகள் கண்டு எங்கேனும் தடவழி குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. நான் சொல்வதுபோல் உண்மையில் அவ்வாறு வண்டிப்பாதை இருந்திருந்தால், என் தந்தையின் பெயரிலுள்ள கிரய பத்திரத்திலோ, எனக்கு என் தந்தை அளித்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்திலோ அது குறித்து சொல்லப்பட்டிருக்கும் என்றால், சரியல்ல. ஏற்கனவே வண்டிப்பாதை இருந்தது அது குறித்து பத்திரத்தில் குறிப்பிடவில்லை.

9) அவ்வாறெனில் நான் என் மூல ஆவணங்களில் இல்லாத பாதையைத்தான் தற்போது கேட்டுள்ளேன் என்றால், சரியல்ல. பாதை இருந்தது.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.